கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் பெய்த அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏரல் வட்டம், திருக்களூர், உடையார் குளம் கிராமங்களில் நேற்று முன்தினம் (29.12.2023) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், திருக்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் பிரபஞ்சன், கூட்டுறவு சங்க மாவட்ட துணை பதிவாளர் ரவீந்திரன், வட்டாட்சியர் மலர்தேவன், கிராம நிர்வாக அலுவலர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

இம்மாதம் 17, 18 தேதிகளில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல்,மங்கல குறிச்சி ஆகிய பகுதிகளில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அங்குள்ள நியாயவிலைக் கடையினை ஆய்வு செய்தார்.அங்குள்ள பொதுமக்களிடம் மழைபாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். உடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் கோபால், கூட்டுறவு சங்க பதிவாளர் சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் உள்ளனர்.

இந்திய கடற்படை முன்னாள் அதிகாரிகள்

8 பேரின் மரண தண்டனை குறைப்பு!

கத்தார் நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, டிச.31-

இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாக கைதான 8 இந்திய முன்னாள் கடற்படை அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை கத்தார் கோர்ட்டு குறைத்தது.

இந்திய கடற்படையில் அதிகாரிகளாக பணியாற்றி ஓய்வு பெற்ற 8 பேர், மேற்கு ஆசிய நாடான கத்தாரின் தோஹா நகரில் உள்ள அல் தஹ்ரா குளோபல் டெக்னாலஜிஸ் என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர்.

அந்நிறுவனம், கத்தார் ஆயுதப்படைகளுக்கும், பாதுகாப்பு அமைப்புகளுக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இதற்கிடையே, கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம், அந்த 8 பேரையும் கத்தார் உளவுப் பிரிவு கைது செய்தது. இஸ்ரேல் நாட்டுக்காக கத்தார் நீர்மூழ்கி கப்பல் திட்டம் குறித்து உளவு பார்த்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வழக்கில் 8 பேருக்கும் மரண தண்டனை விதித்து கத்தார் கோர்ட்டு கடந்த அக்டோபர் 26ந் தேதி தீர்ப்பு அளித்தது. மேல்முறையீடு 8 பேருக்கும் இந்தியா ஆதரவுக்கரம் நீட்டியது. அவர்களின் விடுதலைக்காக கத்தார் அரசிடம் பேசி வந்தது. மேலும், கடந்த 1-ஆம் தேதி, துபாயில் நடந்த பருவநிலை மாநாட்டின் போது, கத்தார் நாட்டு அமீரிடம் இது தொடர்பாக பிரதமர் மோடி பேசினார். அத்துடன், கத்தார்மேல் முறையீட்டு கோர்ட்டில், 8 இந்தியர்களின் மரண தண்டனைக்கு எதிராக இந்தியா மேல்முறையீடு செய்தது.

தண்டனை குறைப்பு அந்த வழக்கில் நேற்று முன்தினம் கோர்ட்டு பரபரப்பு தீர்ப்பு அளித்தது. 8 இந்தியர்களின் மரண தண்டனையை குறைத்து உத்தரவிட்டது. புதிய தண்டனை விவரம் வெளியிடப்படவில்லை. இத்தீர்ப்பு, இந்தியாவுக்கு மிகப்பெரிய ராஜ்யரீதியிலான வெற்றியாக கருதப்படுகிறது. இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

8 இந்தியர்களின் மரண தண்டனையை கத்தார் கோர்ட்டு குறைத்திருப்பதாக அறிந்தோம். கத்தாருக்கான இந்திய தூதரும், இதர அதிகாரிகளும், 8பேரின் குடும்பத்தினருடன் கோர்ட்டில் அமர்ந்து இருந்தனர். தொடக்கத்தில் இருந்தே அக்குடும்பத்தினருக்கு ஆதரவாக இருக்கிறோம். சட்ட உதவி 8 பேருக்கும் தூதரக உதவியும், சட்ட உதவியும் அளிக்கப்படும்.

மேலும், தொடர்ந்து கத்தார் அதிகாரிகளிடம் பேசி வருகிறோம்.விரிவான தீர்ப்பின் நகலுக்காக காத்திருக்கிறோம். அடுத்தகட்ட நடவடிக்கையை முடிவு செய்ய வக்கீல்களுடனும், குடும்ப உறுப்பினர்களுடனும் தொடர்பில் இருக்கிறோம். இது, உணர்வு பூர்வமான வழக்கு என்பதால், இதற்கு மேல் எதுவும் சொல்லக்கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பேரிடருக்கு உதவ முன்வராமல்

தி.மு.க. அரசைக் குறைகூறுபவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!

நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் கண்டனம்!

சென்னை, டிச.31-

நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் பேரிடர் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமர் மோடியோ, ஒன்றிய அரசோ உடனடியாக உதவ முன்வராமல் இருப்பதை மறைத்து இங்குள்ள பா.ஜ.க. மற்றும் சிலர் தி.மு.க. அரசை குறை கூறுவதை மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். வரும் காலங்களில் அவர்களுக்கு தக்க பாடம் கற்பிப்பார்கள். வரலாறு நிச்சயம் நிரூபிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

History will Turn Back என்பதை மறக்க வேண்டாம். வடிவேல் Comedy போல் சிரிப்பு தான் வருகிறது. தி.மு.கழகம் போராட்டம், கைது, ரிமாண்ட், நீதிமன்றம், தண்டனை, சிறைக்கொடுமை, விடுதலை என அனைத்தும் பார்த்த இயக்கம். எங்கள்

முதலமைச்சர் தலைவர் கலைஞரின் பாதையில் அவர் கழகத்தில் உள்ள உடன் பிறப்புகளை கழக இலட்சியத்தோடு (இலட்சியப்பணி வெற்றி பெற) பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில் நடை போட்டு ஏற்றுள்ள இழப்பு தாங்கிக் கொண்ட துன்பம் சொல்லி முடியாது.

இலட்சியத்திற்காக கருத்தை எளிதாக மனங் கொள்ளுமாறு பட்ட துயரம், கொட்டிய குருதி, சிந்திய கண்ணீர், உயிர் பறிக்கப்பட்ட, உடன் பிறப்புகள் ஆம் கழகம் தந்துள்ள விலை, செய்துள்ள தியாகம் சொல்லில் அடங்காது. இதை மனதில் கொண்டு வீரநடை போடும் நமது முதல மைச்சர், யாருக்கும் எந்த தீய சொல்லிற்கும் அஞ்சாத இதயம் படைத்தவர்.

நம் நாட்டில் மதம் என்பது முக்கியமல்ல மக்களே என் உயிர். அனைத்து மதங்களும் சமமாகப் பார்க்கப்பட வேண்டியவை என்ற கருத்துகளை நிலைநாட்டி மதத்தால் பிளவோ, பிரிவோ ஏற்படாத வண்ணம் தளபதியின் அரசு அமைந்துள்ளது. மதத்தை வைத்து அரசியல் செய்வது என் வேலையல்ல. என் மக்களின் பாதுகாப்பும் அவர்களின் முன்னேற்றமும் முக்கியம் என்று வீர நடைபோட்டுக் கொண்டு உள்ளார்.

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களை இந்த நேரத்தில் நினைவு கூருகிறோம். மதம் என்ற வார்த்தைக்கு மதிப்பளிக்காமல், 10 ஆண்டுகள் அவர் பிரதமராக மத்தியில் ஆட்சி நேரத்தில் அவர் தன்னை சீக்கியர் என்று அடையாளப்படுத்தியது இல்லை. மக்களை மட்டும் நேசிக்கும் ஆட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்று ஆட்சி செய்தவர்.

இன்று நமது பாரதப் பிரதமர் மோடி ஜீ அவர்கள் 2021-ல் குஜராத்தில் வெள்ளம் வந்த போது உடனே ஓடி 1000 கோடி ரூபாய் கொடுத்து உயிர் இறந்தவர்களுக்கு தலா 2 லட்சம் மத்திய அரசின் உதவித் தொகை என்று அளித்தார். நம் தமிழ்நாட்டிற்கும் அவர் தானே பிரதமர், குஜராத்தை நேசிக்கும் பிரதமர் நம் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட இவ்வளவு பெரிய பேரிடர், எத்தனை மக்களின் கண்ணீர், பேரிழப்பு, இதை அறிந்தும் இன்னமும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதல் கூற வரவில்லை என்று மக்களின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு திருமதி. ஓவியம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களிடையே தமிழ் இலக்கண ஆர்வம் அதிகரிக்க

6,218 பள்ளிகளில் 'முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம்' நிகழ்ச்சி!

ஆண்டுக்கு மூன்று 'தமிழ்க் கூடல்' நிகழ்வுகள் நடத்த திட்டம்!

சென்னை, டிச.31-

ஓங்கலிடைப் பிறந்து உயர்ந்தோர் தொழ விளங்கி ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் தன்னேரிலாத தமிழின் ஆற்றலையும், ஆகச் சிறந்த இளமைத் திறத்தையும் பச்சிளம் பயிர்களாகிய பள்ளிப் பிள்ளைகள் அறியவும்; நினையவும், தமிழார்வமும், தமிழுணர்வு முடையோர் தங்கள் தமிழாற்றலை வெளிப்படுத்தவும் வாய்ப்பாகத் தமிழ் மன்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சரின் பேருள்ளப் பெருந்தகைமையால் தமிழ்நாட்டு அரசு உயர்நிலைப் பள்ளிகள்; மேல்நிலைப் பள்ளிகள்தோறும் ஏற்படுத்தப்பட்டன. மன்றம் என்றாலே, அது தமிழுக்கான மன்றமே என்ற அறவுணர்வே பள்ளிப் பிள்ளைகளின் உள்ளத்தில் மேலோங்க வேண்டும்; தமிழ் வளர்ச்சிக்கான திருத்தொண்டர்களாக அவர்கள் தொண்டாற்றும் வாய்ப்பும் வேண்டும் என்ற பெருநோக்கத்தில் உருவாக்கப்பட்டவையே பள்ளிகளுக்கான தமிழ் மன்றங்கள்.

பள்ளிகள் / ஆசிரியர்கள் / மாணவர்கள் எனத் தாங்களே நிகழ்த்திவந்த தமிழ் மன்றங்கள், தமிழ் நாட்டு வரலாற்றில் முதன் முறையாக நிதிநல்கையும், அரசேற்பும் பெற்றுள்ளன என்பது வரலாற்றுப் பெருமிதம் ஆகும். அதற்கான முன்மொழிவாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது, தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சரால் சட்டமன்றப் பேரவையில் 19.04.2022ஆம் நாளன்று பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ்மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நிகழ்ச்சிகளை நடத்திட ஏதுவாக ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/ வீதம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

மேற்கண்ட அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு அரசாணை வெளியிடப்பட்டு ரூ.5,59,62,000/ (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அப்பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நிகழ்வுகளை நடத்திட 6218 பள்ளிகளில் ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/ வீதம் நிதி நல்கை வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையானது பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள முதன்மை கல்வி அலுவலர்கள் வழியாக அனைத்து அரசு உயர் நிலைப்பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்பெறும். ஒவ்வொரு பள்ளியிலும் பணியாற்றும் முதுநிலைத் தமிழாசிரியர் ஒருவர் அப்பள்ளியின் தலைமையாசிரியரால் நியமிக்கப்பெற்றுத் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்தப்பெற வேண்டும். மாவட்டந்தோறும் நிதி நல்கை பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

அரியலூர் மாவட்டம் - 119 பள்ளிகள், சென்னை மாவட்டம் - 162 பள்ளிகள், கோயம்புத்தூர் மாவட்டம் - 197 பள்ளிகள், கடலூர் மாவட்டம் - 241 பள்ளிகள், தருமபுரி மாவட்டம் - 226 பள்ளிகள், திண்டுக்கல் மாவட்டம் - 170 பள்ளிகள், ஈரோடு மாவட்டம் - 189 பள்ளிகள், காஞ்சிபுரம் மாவட்டம் - 100 பள்ளிகள்,

கன்னியாகுமரி மாவட்டம் - 135 பள்ளிகள், கரூர் மாவட்டம் - 114 பள்ளிகள், கிருட்டினகிரி மாவட்டம் - 268 பள்ளிகள், மதுரை மாவட்டம் - 216 பள்ளிகள், நாகப்பட்டினம் மாவட்டம் - 96 பள்ளிகள், நாமக்கல் மாவட்டம் - 161 பள்ளிகள், பெரம்பலூர் மாவட்டம் - 92 பள்ளிகள், புதுக்கோட்டை மாவட்டம் - 219 பள்ளிகள், இராமநாதபுரம் மாவட்டம் - 138 பள்ளிகள், சேலம் மாவட்டம் - 291 பள்ளிகள், சிவகங்கை மாவட்டம் - 138 பள்ளிகள், தஞ்சாவூர் மாவட்டம் - 230 பள்ளிகள், நீலகிரி மாவட்டம் - 94 பள்ளிகள், தேனி மாவட்டம் - 106 பள்ளிகள், திருவள்ளூர் மாவட்டம் - 225 பள்ளிகள், திருவாரூர் மாவட்டம் - 144 பள்ளிகள், தூத்துக்குடி மாவட்டம் - 88 பள்ளிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 224 பள்ளிகள், திருநெல்வேலி மாவட்டம் - 94 பள்ளிகள், திருப்பூர் மாவட்டம் - 162 பள்ளிகள், திருவண்ணாமலை மாவட்டம் - 337 பள்ளிகள், வேலூர் மாவட்டம் - 135 பள்ளிகள், விழுப்புரம் மாவட்டம் - 236 பள்ளிகள், விருதுநகர் மாவட்டம் - 190 பள்ளிகள், தென்காசி மாவட்டம் - 80 பள்ளிகள், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 146 பள்ளிகள், செங்கல்பட்டு மாவட்டம் - 143 பள்ளிகள், திருப்பத்தூர் மாவட்டம் - 115 பள்ளிகள், இராணிப்பேட்டை மாவட்டம் - 121 பள்ளிகள், மயிலாடுதுறை மாவட்டம் - 76 பள்ளிகள் என மொத்தம் 6218 அரசு உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் மன்றங்களுக்குத் தமிழ் வளர்ச்சிக் கெனப் பன்னூறு வகைகளிலும் நிலைகளிலும் பெருந்தொண்டாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாளின் நினைவாக "முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம்" எனப் பெயர் சூட்டிப் பெயர்ப்பலகைகளில் இப்பெயரிலேயே 6218 அரசுப் பள்ளிகளிலும் குறிப்பிட வேண்டும் என்ற அரசாணைப்படி செயற்படும்படி அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அத்துமீறல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள

6 பேருக்கு உண்மை கண்டறியும் சோதனை!

பாட்டியாலா நீதிமன்றத்தில் காவல்துறை கோரிக்கை!

புதுடெல்லி, டிச.31-

நாடாளுமன்றத்தில் கடந்த 13-ஆம் தேதி, பார்வையாளர்களாக நுழைந்த சாகர் சர்மா, மனோரஞ்சன் ஆகியோர் திடீரென்று, மக்களவைக்குள் நுழைந்து புகைக் குண்டுகளை வீசினர். அதே நேரத்தில் அமோல் ஷிண்டே, நீலம் ஆகிய இருவர் நாடாளுமன்றத்துக்கு வெளியே புகைக் குப்பிகளை வீசி ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

இந்த சம்பவத்துக்கு மூளையாக செயல்பட்ட லலித் ஜா உட்பட 6 பேரை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் டெல்லி காவல்துறை கைது செய்தது. இவர்களுக்கு, ஜனவரி 5-ஆம் தேதி வரையில் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குற்ற வாளிகளிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த டெல்லி காவல்துறை அனுமதி கோரியுள்ளது.

டெல்லி பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்தில் காவல்துறை சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆறுமுகநேரியில் உள்ள நியாயவிலைக் கடையில் நேற்று முன்தினம் (29.12.2023), அதிகனமழையின் காரணமாக மிகக்கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஏரல் மற்றும் சாத்தான்குளம் ஆகிய 5 வட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் ரூ.6000 நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்ததைத்தொடர்ந்து, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மிகக்கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள திருச்செந்தூர் வட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் ரூ.6000 நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசியை வழங்கி தொடங்கி வைத்தார்.

தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் மதுரை மாநகராட்சி வெள்ளிவீதியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் சிறப்பு முகாமில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர். இந்திராணி பொன்வசந்த் கலந்து கொண்டனர்.